7102

Register Number

**Part III**

# இந்தியப் பண்பாடு

# INDIAN CULTURE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

I. எல்லா வினாக்களுக்கும் விடையளி.

A. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் : 10 × 1 = 10

1. அக்னியின் பெருமையைக் கூறும் புராணம்

அ) சிவ புராணம் ஆ) விஷ்ணு புராணம்

இ) ஆக்னேயம் ஈ) பிரம்ம புராணம்.

2. வேதங்களைக் கண்டறிந்தவர்கள்

அ) திராவிடர்கள் ஆ) ஆரியர்கள்

இ) ரிஷிகள் ஈ) சமணர்கள்.

3. மனோன்மணீயத்தின் ஆசிரியர்

அ) கம்பர் ஆ) ப. நீலகண்டன்

இ) பேராசிரியர். சுந்தரம்பிள்ளை ஈ) டி.கே. சண்முகம்.

4. பெரிய புராணத்தின் ஆசிரியர்

அ) கம்பர் ஆ) சேக்கிழார்

இ) ஜெயங்கொண்டார் ஈ) திருத்தக்க தேவர்.

[ Turn over

5. ஒற்றைக் கல் ரதங்கள் எந்த அரசர்களைச் சார்ந்தவை ?

அ) சோழர்கள்
ஆ) பல்லவர்கள்
இ) பாண்டியர்கள்
ஈ) இராஷ்டிரகூடர்கள்.

6. தேம்பாவணி என்ற நூலின் ஆசிரியர்

அ) ஜி.யு. போப்
ஆ) வீரமாமுனிவர்
இ) கம்பர்
ஈ) பாரதிதாசன்.

7. சிவஞான போதத்தின் ஆசிரியர்

அ) மெய்கண்ட தேவர்
ஆ) உமாபதி சிவம்
இ) திருஞான சம்பந்தர்
ஈ) சுந்தரர்.

8. கடவுளே உண்மை, உண்மையே கடவுள் என்று போதித்தவர்

அ) விவேகானந்தர்
ஆ) துளசிதாசர்
இ) மகாத்மா காந்தி
ஈ) இராஜா ராம்மோகன் ராய்.

9. பஞ்சீலக் கோட்பாட்டை உலகிற்கு வகுத்தளித்தவர்

அ) ஜவஹர்லால் நேரு
ஆ) விவேகானந்தர்
இ) டாக்டர். அம்பேத்கார்
ஈ) திலகர்.

10. பிரம்ம ஞான சபை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1828
ஆ) 1875
இ) 1920
ஈ) 1898.

B. கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்க : $10 \times 1 = 10$

11. இந்தியப் பண்பாட்டின் சிறப்பு அம்சம் .......................... ஒற்றுமை காண்பதாகும்.

12. வேதம் என்ற சொல்லுக்கு .......................... என்று பொருள்.

13. ......................... தமிழ் நூல்களில் மிகப் பழமையான நூல் ஆகும்.

14. அத்வைதத் தத்துவத்தை உலகிற்கு அளித்தவர் ......................... ஆவார்.

15. சமண சமயத்தை நிறுவியவர் ......................... ஆவார்.

16. மௌரியப் பேரரசு ......................... நிறுவப்பட்டது.

17. அல்பருனி என்ற முஸ்லீம் அறிஞர் இந்து முஸ்லீம் ஒற்றுமையை ......................... இயக்கத்தின் மூலம் நிலைநாட்டினார்.

18. மத்துவரின் தத்துவம் ......................... ஆகும்.

19. ......................... பிரம்ம சமாஜத்தை 1828 இல் கொல்கொத்தாவில் நிறுவினார்.

20. சாகுந்தலம் என்ற நாடகத்தை இயற்றியவர் ......................... ஆவார்.

C. பின்வருவனவற்றைப் பொருத்துக : $10 \times 1 = 10$

| | |
|---|---|
| 21. அகிம்சை | அ) நம்மாழ்வார் |
| 22. திருவாசகம் | ஆ) ஆதிகிரந்தம் |
| 23. கலிங்கத்துப் பரணி | இ) பெரியாழ்வார் |
| 24. திருவாய்மொழி | ஈ) கொல்லாமை |
| 25. விஷ்ணு சித்தர் | உ) ஜெயங்கொண்டார் |
| 26. வெள்ளையனே வெளியேறு இயக்கம் | ஊ) மாணிக்கவாசகர் |
| 27. சீக்கியம் | எ) காந்தியடிகள் |
| 28. இஸ்லாம் | ஏ) கர்னல் ஆல்காட், பிளவட்ஸ்கி |
| 29. பிரம்ம ஞான சபை | ஐ) இந்தியா |
| 30. தரும பூமி | ஒ) அமைதி. |

D. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளி : 15 × 1 = 15

31. நாகரீகம் என்றால் என்ன ?

32. சிந்துச் சமவெளி நாகரீகத்தை உலகறியச் செய்தவர் யார் ?

33. நான்கு வேதங்கள் யாவை ?

34. சுருதி என்றால் என்ன ?

35. சபா என்றால் என்ன ?

36. குறிஞ்சி என்றால் என்ன ?

37. சமண சமயத்தின் மூன்று இரத்தினங்களைக் குறிப்பிடுக.

38. சமண சமயத்தின் இரு பிரிவுகள் யாவை ?

39. மௌரியர்களின் காலம் எது ?

40. மகேந்திரவர்மன் காலக் குகைக் கோயில்கள் காணப்படும் இரண்டு இடங்களின் பெயரினைக் குறிப்பிடுக.

41. சீக்கிய சமயத்தினைத் தோற்றுவித்தவர் யார் ?

42. பிரம்மசமாஜத்தைத் தோற்றுவித்தவர் யார் ?

43. நாயன்மார்களில் முக்கிய நால்வரின் பெயரினைக் குறிப்பிடுக.

44. இந்தியா உலகுக்கு அளித்துள்ள கொடை யாது ?

45. சர்வோதயம் என்றால் என்ன ?

## பகுதி - ஆ

II. எவையேனும் பதினைந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகட்கு மிகாமல் விடையளி : $15 \times 3 = 45$

46. பண்பாடு பற்றிய வால்டேரின் வரையறை யாது ?

47. இந்தியப் பண்பாட்டின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

48. வேற்றுமையில் ஒற்றுமை என்றால் என்ன ?

49. சிந்துச் சமவெளி மக்களின் சமுதாய நிலை பற்றிக் குறிப்பிடுக.

50. ஸ்மிருதிகள் என்றால் என்ன ?

51. உபநிடதங்கள் என்றால் என்ன ?

52. இசைத் தமிழ் என்றால் என்ன ?

53. ஐந்திணைகளைக் குறிப்பிடுக.

54. மத்திம பாதை அல்லது இடைவழி என்றால் என்ன ?

55. சோழர்களைப் பற்றி அறிய உதவும் வரலாற்று ஆதாரங்கள் யாவை ?

56. நான்கு வகை ஆசிரமங்கள் யாவை ?

57. இஸ்லாத்தின் ஐந்து தூண்கள் யாவை ?

58. கிறிஸ்துவ சமயக் கொள்கைகளைக் குறிப்பிடுக.

59. துளசிதாசர் பற்றி குறிப்பு தருக.

60. ஆண்டாள் பற்றி குறிப்பு தருக.

61. சத்தியாக்கிரகம் பற்றி விளக்குக.

62. இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்கள் யாவை ?

63. இந்தியா 'தர்ம பூமி' என அழைக்கப்படுவதேன் ?

64. சூழ்நிலை மண்டலம் என்றால் என்ன ?

65. இந்தியப் பண்பாட்டில் நதிகளின் சிறப்பினை விளக்குக.

## பகுதி - இ

III. எவையேனும் **பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகட்கு மிகாமல் விடையளி : 10 × 6 = 60

66. நாகரீகத்திற்கும், பண்பாட்டிற்கும் உள்ள தொடர்பினை விளக்குக.

67. இந்தியப் பண்பாட்டிற்கு சிந்துச் சமவெளி நாகரீகத்தின் கொடைகளை விளக்குக.

68. சிந்துச் சமவெளி மக்களின் சமயம் பற்றி விளக்குக.

69. பிற்கால வேதகால சமய நிலையினை விளக்குக.

70. பிற்கால வேதகால சமுதாய நிலையினை விளக்குக.

71. சங்க இலக்கியங்களில் காணப்படும் சமயக் கருத்துக்களை விளக்குக.

72. தொல்காப்பியர் கால அகவாழ்வு பற்றி விளக்குக.

73. இந்து சமயம் இந்தியப் பண்பாட்டிற்கு ஆற்றியத் தொண்டினை விளக்குக.

74. இந்தியப் பண்பாட்டிற்கு சோழர்களின் பங்கினை விளக்குக.

75. பாண்டியர்கள் கலை, கட்டடக்கலைக்கு ஆற்றியத் தொண்டினை விளக்குக.

76. இந்தியப் பண்பாட்டிற்கு கிறிஸ்துவ சமயத் தொண்டு நிறுவனங்களின் பணிகளை விளக்குக.

77. பக்தி இயக்கத்தின் சீரிய பண்புகளை விளக்குக.

78. இஸ்லாம் சமயத்தின் கோட்பாடுகளை விளக்குக.

79. சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையையும், கொள்கைகளையும் விவரி.

80. இந்திய சுற்றுச் சூழலை விளக்குக.

## பகுதி - ஈ

IV. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்க அளவில் விடையளி: $5 \times 10 = 50$

81. இந்தியாவில் நிலவும் வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை எவ்வாறு திகழ்கின்றது ?

82. புத்தரின் வாழ்க்கையையும், சமய போதனைகளையும் விவரி.

83. இந்தியப் பண்பாட்டிற்கு குப்தர்களின் கொடை குறித்து ஒரு கட்டுரை வரைக.

84. ஆழ்வார்களின் சமயத்தொண்டினை விளக்குக.

85. இந்திய மறுமலர்ச்சிக்கு இராஜா ராம்மோகன் ராய் ஆற்றியத் தொண்டினை விளக்குக.

86. உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் கொடை பற்றி விளக்குக.

87. இந்தியப் பண்பாடும், சுற்றுச் சூழல் கல்வியும் குறித்து ஒரு கட்டுரை வரைக.